மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) அண்ட் (இ)–தமிழ்நாடு சிறு தொழில் கழகம், தமிழ் நாடு கைவினைப் பொருட்கள் வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு சரிகை தொழிற்சாலை, தமிழ்நாடு பீங்கான் தொழில் கழகம், தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தால் நிர்வகிக்கப்படும் பஞ்சாலைகள், ஆலங்குளம் தமிழ்நாடு சிமிட்டித் தொழிற்சாலை ஆகியவைகளில் அவசர கால ஆபத்துக்கள் காப்பீட்டுத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது.

THIRU N. DENNIS : Sir, may I know whether the benefit has been extended to temporary workers ?

The HON. THIRU S. J. SADIQ PASHA: Under the Emergency Risks Insurance Act, the property insurable means, in respest of factories, the whole plant and machinery and materials used in the factory in the production or transmission of motive power and maintenance of plant machinery and buildings. இதிலே தொழிலாளர்கள் வருவதில்லை.

திரு. என். கே. பழனிசாமி : பல இடங்களில் ஆண்டி ஃபயர் ஃபைட்டிங் சாதனங்களை வைத்துக்கொண்டு தண்ணீர் இல்லாமல் இருக்கிறார்கள். திடீரென்று தீ பற்றிக் கொண்டால் எப்படி அதை அணைக்க முடியும் ? ஆகவே, இந்த மாதிரித் தவறுகளுக்குக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ? விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சரியான முறையில் நடவடிக்கை எடுக்கவேண்டியது நம்முடைய கடமை, பொறுப்பு. தவறுகள் ஏற்படும்போது எமர்ஜன்சி ரிஸ்க் இன்ஷூரன்ஸ் திட்டப்படி ஈடு செய்யக் கூடிய முறை இருக்கிறது. இந்தத் திட்டம் மத்திய அரசாங்கத்திலிருந்து கொண்டு வரப்பட்டு நம்முடைய கழகங்களும் பின்பற்றி வருகின்றன.

(முற்பகல் 9–30)

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, இந்த எமர்ஜன்சி ரிஸ்க் இன்ஷூரன்ஸ் பொதுவாக யுத்த காலத்திலேதான் ஒவ்வொரு நாட்டிலும் அமலில் இருக்கும். ஏறக்குறைய இப்போது யுத்தம் முடிந்து 4 ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்னும் இந்த எமர்ஜன்சி ரிஸ்க் இன்ஷூரன்ஸை வணிகர்களும், அரசாங்கத் தொழிற் நிறுவனங்களும், இன்ஷூரன்ஸ் கட்டாயம் செலுத்த வேண்டுமென்று சொல்கிறார்கள். இது குறித்து மத்திய அரசுக்கு மாநில அரசு ஆட்சேபணை தெரிவித்துள்ளதா ? இதோடு நிறுத்திக் கொள்வதற்கு மத்திய அரசுக்கு மாநில அரசு ஆலோசனை கூறுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற எமர்ஜன்சி வேறு இந்த எமர்ஜன்சி வேறு. அவர்கள் கூறுவது அரசியல் சட்டப்படி வரும் எமர்ஜன்சி. இது அவசர கால ஆபத்துக்கள் (எமர்ஜன்சி ரிஸ்க் கூட்ஸ் இன்ஷூரன்ஸ் ஆக்ட்) என்ற திட்டத்தின் கீழ் இருக்கிறது. அதற்கான சட்டத்தின் விதிமுறைகள்படி இது அமலாக்கப் படுகிறது.

1975 மார்ச் 19]

திருநெல்வேலியில் பட்டு உற்பத்திப் பண்ணைகள்

* 383 வினா.—திரு. எம். முத்தையா : மாண்புமிகு தொழில்—மின் சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டத்தில் மேலும் புதிய பட்டு உற்பத்திப் பண்ணைகள் ஏற்படுத்தும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : திருநெல்வேலி மாவட்டத்தில் புதிதாக பட்டு உற்பத்திப் பண்ணை ஆரம்பிக்கும் உத்தேசம் இல்லை.

திரு. எ. ஆர். சுப்பையா : தலைவரவர்களே, குற்றாலத்தில் ஆரம் பிக்கப்பட்டு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆரம்பத்தில், குற்றாலம் செங்கோட்டைதான் பட்டு உற்பத்திக்கு ஏற்ற இடம் என்று அறிவிக்கப் பட்டது. அதற்குரிய முறையில் விரிவாக அந்தத் திட்டத்தைச் செயல் படுத்தவில்லை. அதை உடனடியாகச் செயல்படுத்த அரசு யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : செங்கோட்டையில் அந்த பார்ம் அட்மினிஸ்டிரேடிவ் சென்டராக இருந்து வருகிறது. மற்ற விவரங்கள் இப்போது இல்லை.

Wages for Plantation Labour

* 384 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(*a*) whether it is a fact that the rates of minimum wages for workers of rubber, tea and coffee plantations in the State has been revised ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தோட்டத் தொழிலாளருக்கான குறைந்தபட்ச ஊதிய வீதங்களைத் திருத்தியமைப்பது குறித்து அவசிய மான விசாரணை செய்து மாநில அரசுக்கு ஆலோசனை சொல்வதற்காக, ஒரு குழு 30–5–1974 நாளிட்ட தொழிலாளர் வேலைவாய்ப்புத்துறையின் அரசாணை எண். 427-ன்படி நிறுவப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : சார், ரப்பர் தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு எந்தவிதமான குறைந்தபட்ச ஊதியமும் கிடையாது. அந்தப் பணியில் இருப்பவர்களுக்கு அன்-ஸ்கில்ட் ஒர்க்கரை